திரு. கே. டி. கே. தங்கமணி: மதுரை கார்ப்பரேஷனில் எந்தெந்தப் பகுதிகள் இணைக்கப்படும்? குறிப்பாக மாடக்குளம் பஞ்சாயத்து இணைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மாடக்குளம் பஞ்சாயத்தில் ஒரு பகுதி எடுக்கப்படவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்களோடு நாங்கள் விவாதித்ததற்குப் பிறகு பூராப் பகுதியையும் எடுக்க வேண்டும் என்று முடிவு செய்து, மாடக்குளம் பூராவும் மாநகராட்சியோடு இணைக்கப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது.

Lay off compensation to workers

* 240 *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the tripartite committee constituted during 1973 to go into the award of lay off compensation to workers affected by the power cut has submitted its report; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மின்விசை வெட்டு குறித்து அரசு பிறப்பித்த ஆணைகளைச் செயற்படுத்துவதில் அவ்வப்போது பல சிக்கல்கள் எழுந்தன. இந்தச் சிக்கல்கள் தக்கமுறையில் கவனிக்கப்படவும், உழவர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் மின்சாரத்தைப் பயன்படுத்தும் மற்ற வகையினருக்கும் ஏற்பட்ட இடையூறுகளைக் களையும் பொருட்டு இந்தச் சிக்கல்களுக்குத் தக்க தீர்வு காணவும் வேண்டியிருந்தது. மின்விசை வெட்டின் விளைவால் எழக்கூடிய சிக்கல்களைக் குறித்துத் தக்க முறையில் விரிவாக அறிந்துகொள்ள உதவும்பொருட்டும், அந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் தக்க ஏற்பாடுகளை வகுக்கும் பொருட்டும் மாநில அளவிலான குழுவொன்று 1973 பிப்ரவரியில் அமைக்கப்பட்டது. தொழில்துறை அமைச்சர் இதன் தலைவர். மின்சார அமைச்சரும் தொழிலாளர் நல அமைச்சரும் இதில் உறுப்பினர்கள். இக்குழுவில் தொழிலதிபர்களின் பிரதிநிதிகளும், தொழிலாளர்களின் பிரதிநிதிகளும், அரசு அதிகாரிகளும் இடம் பெற்றிருந்தனர். இக்குழு அறிக்கை ஏதும் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படவில்லை.

[1973 நவம்பர் 22

திரு. என். கே. பழனிசாமி: அந்த ஒப்பந்தப் பிரகாரம் மின் வெட்டினால் பாதிக்கப்பட்டு வேலை இழந்தத் தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு மூன்று நாட்களுக்குள் கொடுக்கவேண்டும் என்று இருந்தும், மில்கள் கொடுக்கவில்லை. அதற்கான நடவடிக்கை எடுத்து அதை வசூல் செய்வதற்குச் சர்க்கார் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: நஷ்ட ஈடு கொடுக்கிற பிரச்சினை அதிகமாக இல்லை. தொழிலாளர்களுக்கு ரூ. 50-லிருந்து 150 வரை முன் பணமாகக் கொடுக்கின்ற ஒரு தீர்ப்பு ஒன்று ஆட்சித் தலைவரின் கீழே அமைக்கப்பட்ட குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு, செயலாற்றப்பட்டுக் கொண்டு வருகிறது. அந்தக் குழு அறிக்கை ஒன்றும் தருவதற்குப் பொறுப்பு எதுவும் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: மின்வெட்டு ஏற்பட்ட காரணத்தினால், ஏற்கனவே கிடைக்கக்கூடிய பாதிச் சம்பளம் போதாது, எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருந்தார்கள். ஒவ்வொரு மாவட்ட கலெக்டரும் அதற்கான ஏற்பாடு செய்தார்கள். இப்பொழுது கோவை மாவட்டத்தில்தான் ரூ. 100, 200 அட்வான்ஸ் கிடைத்திருக்கிறது. மற்ற மாவட்டங்களில் கிடைப்பதற்கு அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மற்ற மாவட்டங்களில் அப்படிப்பட்ட பிரச்சினைகள் எதுவும் அரசின் கவனத்திற்கு வரவில்லை. வந்தால், அது கவனிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: லே ஆஃப் காம்பென்சேஷன் கொடுப்பது மட்டும் போதாது. அதற்குப் பதிலாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முழுச் சம்பளம் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கை இருந்தால், அது சம்பந்தமாக அரசு ஏதாவது முடிவு எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அப்படிப்பட்ட கோரிக்கை ஒன்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, அது அரசின் ஆய்விலே உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.